Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO.13/2020
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3,Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசோகன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கோவிந்தன் | தொழில் | அலுவலக உதவியாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 28th day of March 2022.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை.-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருப்பத்தூர் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளரக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 தினகரனை தெரியும். கடந்த 14.09.2019 அன்று தேசிய மக்கள் நீதிமன்றம் திருப்பத்தூரில் நடைபெற்றது. அன்றைய தினம் நான் மக்கள் நீதிமன்றத்திற்கு அலுவலக உதவியாளராக நியமிக்கப்பட்டு பணியில் இருந்தேன். அப்போது பகல் 12 மணியளவில் அ.சா.1 தினகரன் ஒரு நபரை அழைத்து வந்து திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் குழுவின் சேர்மன் அவர்களை பார்க்க என்னிடம் கேட்டதன் அடிப்படையில் நான் சேர்மன் அவர்களிடம் அனுமதி பெறறு அவர்களை திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் குழுவின் சேர்மனிடம் அனுப்பி வைத்தேன். எதற்காக அ.சா.1 தினகரன் திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் குழுவின் சேர்மனை பார்த்தார் என்று தெரியாது

ஆனால் பின்னிட்டு மோசடியாக கையொப்பம் செய்தது தொடர்பாக என்பதை பற்றி அறிந்துக்கொண்டேன் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை தற்போது இல்லை என்றதன் பெயரில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

மறு விசாரணை - இல்லை

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO.13/2020
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2,Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெண்ணிலா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | குமார் | தொழில் | பி.எல்.வி |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 28th day of March 2022.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை.-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருப்பத்தூர் சட்ட பணிகள் ஆணை குழுவில் இளநிலை பி.எல்.வியாக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 தினகரனை தெரியும். கடந்த 14.09.2019 அன்று தேசிய மக்கள் நீதிமன்றம் திருப்பத்தூரில் நடைபெற்றது. அப்போது ஜோதி பாசு என்பவர் அறிவிப்பு ஒன்று கொண்டுவந்தார். அந்த அறிவிப்பில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா குரிசிலாப்பட்டு கிளை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நான் உடனடியாக அ.சா.1 தினகரனிடம் மேற்படி நபரை அழைத்து சென்றேன். நான் அ.சா.1 தினகரனிடம் சென்று திருப்பத்தூர் இலவச சட்ட பணிகள் ஆணை குழுவில் எந்த விதமான அனுமதியும் பெறாமல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா குரிசிலாப்பட்டு கிளை மோசடிாக அறிவிப்பு அனுப்பியிருப்பது தெரியவந்தது. இது குறித்து அ.சா.1 தினகரன் திருப்பத்தூர்

வட்ட சட்டபணிகள் ஆணைக்குழுவின் சேர்மனிடம் கூறினார். அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை வந்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை தற்போது இல்லை என்றதன பெயரில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

மறு விசாரணை - இல்லை

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC.NO.13/2020
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1,Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தினகரன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கிருஷ்ணன் | தொழில் | இளநிலை உதவியாளர் |
| கிராமம் | திருப்பூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பூர் | வயது | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 28th day of March 2022.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை.-**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது நீலகிரி மாவட்டம் மாவட்ட சட்ட பணிகள் ஆணை குழுவில் இளநிலை நிர்வாக உதவியாளரக பணியாற்றி வருகிறேன். திருப்பத்தூர் இலவச சட்டப்பணிகள் ஆணை குழுவில் இளநிலை உதவியாளரக பணியாற்றி வந்த சமயம் கடந்த 14.09.2019 அன்று தேதிய மக்கள் நீதிமன்றம் நடைபெற்றது அதில் பங்கேற்பதற்காக ஜோலார்பேட்டை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளை , விசமங்கலம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளை மற்றும் சுந்தரம்பள்ளி ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளை மேற்படி மூன்று கிளைகளின் கிளை வங்கி மேலாளர்கள் பிரிலிட்டிக்கேசன் வழக்குகளை முடிப்பதற்காக அனுமதி கோரி கடிதமும் தலா ரூ. 10 ஆயிரம் வரைவோலை கொடுத்து அனுமதி கேட்டனர். திருப்பத்தூர் இலவச சட்ட பணிகள் ஆணை குழுவின் சேர்மன் மாண்பமை சார்பு நீதிபதியிடம் அனுமதி பெற்று அதனடிப்படையில் மேற்படி வங்கிகள் எங்களுக்கு

அளித்த நபர்களுக்கு திருப்பத்தூர் இலவச சட்ட பணிகள் ஆணை குழுவின் சோமன் அவர்களின் உத்திரவு படி நான் என் கையொப்பமிட்டு 14.09.2019 அன்று நடக்கவிருக்கும் தேசிய மக்கள் நீதிமன்றத்திற்கு அழைப்பாணை அனுப்பினேன். 14.09.2019 தேதி அன்று நடைபெற்றுக்கொண்டிருந்த தேசிய மக்கள் நீதிமன்றத்தில் ஜோதிபாசு என்பரும் வழக்கறிஞர் பிரகாசம் என்பவரும் என்னை அனுகி ஒரு அழைப்பாணையை என்னிடம் காட்டினார்கள். மேற்படி அழைப்பாணையில் குரிசிலாபட்டு ஸ்டேட் பாங்க் வங்கி கிளையிலிருந்து அனுப்பப்பட்டதாக காணப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையை தான் மேற்படி நபர்கள் அன்று கொடுத்தர்கள். 09.09.2019ம் தேதியிட்ட திரு.ஜோதிபாசு என்பருக்கு திருப்பத்தூர் வட்ட சட்டப்பணிகள ஆணைக்குழு அனுப்பியதாக குறிப்பிடும் அழைப்பாணை அ.த.சா.ஆ. 1 ஆகும். மேற்படி குரிசிலாப்ட்டு ஸ்டேட் பாங்க் கிளையிலிருந்த திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவிற்கு எந்த விதமான முன் அனுமதி கடிதமோ அதற்கான கட்டணமோ செலுத்தாமல் அனுப்பப்படடுள்ளது தெரியவந்தது. மேற்படி ஜோதிபாசு என்பருக்கு எந்த விதமான அழைப்பாணையும் திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவில் இருந்து அனுப்பப்படவில்லை என்பதும் எந்த விதமான விடுவி எண்ணும் வழங்கப்படவில்லை என்பது தெரியவந்தது. மேலும் மேற்படி அழைப்பாணையில் உள்ள கையொப்பத்தை காணும்போது நான் வேறு அழைப்பாணையில் போட்ட கையொப்பத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த அழைப்பாணையையில் சேர்த்து மோசடி செய்து இருப்பது தெரியவந்தது. மேற்படி தகவலை நான் திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் சேர்மன் அவர்களிடம் கூறினேன். உடனடியாக திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் சேர்மன் ஜோதிபாசுவை அழைத்து விசாரித்ததில் அதில் தனக்கு அந்த அழைப்பாணை தபால் மூலமாக வந்ததாக கூறினார். மேலும் அந்த அழைப்பாணையில் வரிசை எண் 61 என்று குறிப்பிட்டுள்ளதால் மோசடி குறித்து உடனடியாக குரிசிலப்பட்டு ஸ்டேட் பாங்க் வங்கி மேலாளாரான ஆஜர் எதிரியை வரவழைத்து திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் சேர்மன் மேற்படி மோசடி குறித்து கேட்டார். அப்போது ஆஜர் எதிரி இதுக்குறித்து எனக்கு எதுவும் தெரியாது என கூறினார். உடனே திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் சேர்மன் திருப்பத்தூர் ஸ்டேட் பாங்க் கிளையில்ன முதன்மை மேலாளாரை அழைத்து

விசாரணை செய்தார். அவரும் தனக்கு இதுக்குறித்து எதுவும் தெரியாது என குறிப்பிட்டார். எனவே மேற்படி மோசடிக்காக திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் சேர்மன் அவர்களின் வழியாக நான் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் போலியான ஆவணங்கள் தயாரித்தது தொடர்பாக புகார் மனு திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் சேர்மனிடம் கொடுத்தேன். மேற்படி புகார் மனுவை உடனிடியாக திருப்பத்தூர் வட்ட சட்ட பணிகள் ஆணைக்குழுவின் சேர்மன் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்திற்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பி வைத்தார். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் மனு அ.த.சா.ஆ. 2 ஆகும். என்னை திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளர் 18.09.2019 அன்று அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை தற்போது இல்லை என்றதன் பெயரில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

மறு விசாரணை - இல்லை